DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC.238/2019
**Depositions of PW6 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | செல்லப்பாண்டி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 004th Day of March 2025

Signature of Witness.

**04.03.2025**

எதிரி ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது மங்கல்ரேவில் குடியிருந்து வருகிறேன். ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 29.01.2019 ம் தேதி காலை 09.30 மணியளவில் நான் சம்பவ இடத்தில் இருந்த போது போலீசார் வந்து சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகஜரில் நானும், சின்னராமன் என்பவரும் கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும்.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஓட்டுநர் என்பதால் பணி நிமித்தமாக வெளியூர் செல்வது வழக்கம்

என்றால் சரிதான். விபத்து நடந்ததாக கேள்விபட்ட சமயத்தில் நான் எங்கியிருந்தேன் என்றால் எனது ஊரில் இருந்தேன். விபத்து இறந்த நபர் எனது உறவினர் என்றால் சரிதான். பெத்துமணி, ராஜா, சந்திரசேகர், பிச்சைபாண்டி ஆகியோர் எங்களுக்கு உறவினர்கள் என்றால் சரிதான். என்னை போல் சம்பவத்தை கேள்விபட்டு பெத்துமணி, ராஜா, சந்திரசேகர், பிச்சைபாண்டி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டு நாங்கள் அனைவரும் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். மருத்துவமனையில் போலீசார் எங்களது பெயர், முகவரி, விலாசம் கேட்டு தெரிந்து கொண்டார் என்றால் சரிதான். அங்கு வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். இறந்த நபர் எனது உறவினர் என்பதால் நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னராமன் என்பவரும் என்னை போல் அரசு மருத்துவமனையில் வைத்து கையெழுத்து செய்தார் என்றால் சரிதான்.